எண்: 24 / 2026 **நாள்**: 25.02.2026

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண்.3, தேர்வாணையச் சாலை , சென்னை – 600 003.

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்07/2025, நாள் 25.04.2025-ல் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV பணிகள்) வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர், வனக்காவலர் (பழங்குடி இளைஞர்) பதவிகள் (சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான காலிப்பணியிடங்கள்) தொடர்பான தேர்விற்கான முடிவுகள், தேர்வர்களின் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்கள் 07.01.2026 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு (Onscreen Certificate Verification) ஒட்டுமொத்த தரவரிசை எண், இட ஒதுக்கீட்டு விதி, காலிப்பணியிடங்களின் **எண்ணிக்கை அடிப்படையில் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர், வனக்காவலர் (பழங்குடி இளைஞர்) பதவிகள் (சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டு காலிப்பணியிடங்கள்) தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் 25.02.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.**

கணினிவழித்திரை சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்கள் தங்களது சான்றிதழ்களை 26.02.2026 முதல் 07.03.2026 வரை தேர்வாணைய இணையதளத்தின் ஒருமுறைப் பதிவு பிரிவின் (One Time Registration Platform) மூலம் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சான்றிதழ்களை உரிய நேரத்திற்குள் பதிவேற்றம் செய்யாத தேர்வர்கள், தெரிவின் அடுத்த நிலைக்கு பரிசீலிக்கப்படமாட்டார்கள்.

திரு.பானோத் ம்ருகேந்தர் லால் இ.ஆ.ப.,
செயலாளர்